# Asylum Advice

## பரிசோதனை

## நேர்காணலுக்கு முன்பாக

# பகுதி 2: பரிசோதனை நேர்காணலுக்கு முன்பாக

## 2.1 புகலிட பரிசோதனைக்கு ஒரு அறிமுகம்

உங்கள் வயது, இயலாமை, இனக்குழுமம், தேசிய அந்தஸ்து, இனம், பால், பாலியல் நடத்தை, மதம் அல்லது நம்பிக்கை எதுவாக இருந்தாலும் உங்களை நியாயமாகவும் மரியாதையுடனும் கௌரவமாகவும் நடாத்துவதற்கு Home Office அர்ப்பணிப்புடன் செயற்படும்.

United Kingdom Visas and Immigration (UKVI), (இது Home Office இன் ஒரு பகுதி) என்பது ஐக்கிய இராச்சிய (UK) அரசாங்கத்தின் ஒரு பகுதி. உங்கள் புகலிடக் கோரிக்கையை பரிசீலித்து உங்கள் பூர்வீக நாட்டில் உங்களுக்கு உண்மையிலே உயிர் ஆபத்து உள்ளதா (UK) இல் சர்வதேசப் பாதுகாப்பு உங்களுக்கு தேவையா என்பதை நிர்ணயிக்கும் பொறுப்பு இவர்களுடையது.

புகலிடக் கோரிக்கை நடைமுறையில் பல படிகள் உண்டு. இது எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது உங்கள் சூழ்நிலையைப் பொறுத்துள்ளது ஆனால் உங்கள் கோரிக்கை பரிசீலனையில் இருக்கும் போது UK இல் இருந்து நீங்கள் வெளியேற்றப் பட மாட்டீர்கள்.

வழக்கமாக முதல் படி ஒரு பரிசோதனை நேர்காணல். இது நீங்கள் முதல் முறையாக புகலிடத்திற்கு விண்ணப்பிக்கையில் நடைபெறும். உங்கள் அடையாளத்தை ஊர்ஜிதப்படுத்தவும் எவ்வாறு ஐக்கிய இராச்சியத்துக்குள் வந்தீர்கள் மற்றும் எவ்விதமான பிரத்தியேகத் தேவைகள் உள்ளன என்பதை அறிந்து கொள்வது தான் இந்த நேர்காணலுக்கான முக்கியமான காரணங்கள்

இந்த நேர்காணலின்போது கேட்கப்படும் சில அடிப்படைக் கேள்விகளுக்கு நீங்கள் பதில் அளிக்கவேண்டும். பின் ஒரு திகதியில் உங்கள் புகலிடக் கோரிக்கைக்கான முழு நேர்காணல் நடைபெறும். இந்த முழு நேர்காணலின் போது நீங்களும் உங்கள் குடும்பத்தவர்களும் எதற்காக UK இல் புகலிடம் கோருகிறீர்கள் ஏன் பாதுகாப்பு கேட்கின்றீர்கள் என்ற விடயங்களை விளக்கமாக கூறவேண்டியிருக்கும். உங்கள் புகலிடக் கோரிக்கையை பதிவு செய்வதற்கும் உங்கள் தனிநபர் தகவல்களை பதிவு செய்வதற்கும் உங்கள் தற்போதய நிலைமை தொடர்பாக சுருக்கமான தகவல்களைப் பெறுவதற்குமே இந்த பரிசோதனை நேர்காணல் நடைபெறுகிறது. உங்களை நேர்காணும் அதிகாரி ஆணாக அல்லது பெண்ணாக இருக்கவேண்டும் என்பதை நீங்கள் தீர்மானிக்கலாம். உங்கள் புகலிடக் கோரிக்கை தொடர்பாக ஆளமான கேள்விகள் இந்த நேர்காணலின் போது கேட்கப்பட மாட்டாது.

இருப்பினும் இந் நேர்காணலில் நீங்கள் கொடுக்கும் தகவல்கள் பின்னர் நடாத்தப்படும்

முழு விசாரணையின் போது நீங்கள் கொடுக்கும் தகவல்களுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்படும் என்பதை இவ்விடத்தில் கவனத்தில் கொள்ளவும்.

Home Office உடன் நீங்கள் மேற்கொள்ளும் அனைத்துத் தொடர்புகளிலும் உண்மையாக நடந்து கொள்ள வேண்டும்.

புகலிடக்கோரிகளை உள்ளெடுக்கும் பிரிவுடன் ஒரு பரிசோதனை நேர்காணலுக்காக சந்தர்ப்பம் கேட்டு தொலைபேசியில் அழைத்தால் உங்களிடம் சில் அடிப்படைக் கேள்விகள் தொலைபேசியின் ஊடாகவே கேட்கப்படும். பின்னர் உங்களுடனான நேரடிச் சந்திப்பின்போது இத்தகவல்கள் மீண்டும் ஊர்ஜிதப்பத்தப்படும். உங்களுக்கோ அல்லது உங்களுடன் வந்தவருக்கோ ஏதேனும் உடலூனம் இருந்தாலோ அல்லது உடனடி உதவி தேவை பட்டாலோ ஹோம் ஆபீஸ் க்கு உடனே தெரியபடுத்தவும்

புகலிடக்கோரிகளை உள்ளெடுக்கும் பிரிவுடன் தொடர்பு கொள்ள அழைக்கவேண்டிய எண்: 0208 196 4524 திங்கள் முதல் வியாழன் வரை காலை 9:00 முதல் மாலை 4:45 வரை , மற்றும் வெள்ளி காலை 9:00 முதல் மாலை 4:30 வரை

## 2.2 புகலிடக்கோரிகளை பரிசோதிக்கும் நடைமுறை

புகலிடக்கோரிகளை உள்ளெடுக்கும் பிரிவில் நீங்கள் புகலிடம் கோரி விண்ணப்பிக்கும் பொழுது உங்களில் தங்கியிருப்பவர் எவரையேனும் ( துணைவன் அல்லது துணைவி அல்லது 18 வயதிற்கு குறைந்த குழந்தைகள ் ) அவ்விண்ணப்பத்துடன் இணைக்க விரும்பினால் அவர்களை உங்களுடன் அழைத்து வரவேண்டும். இன்னுமொரு விண்ணப்பதாரரில் தங்கியிருப்பவர் என்ற அடிப்படையில் அவ்விண்ணப்பதாரருடன் இணைந்து கொள்ள உங்களுக்கு உரிமை உள்ளது இருப்பினும் உங்கள் புகலிடக் கோரிக்கைக்கு வேறு காரணங்கள் இருந்து அவற்றை கவனத்தில் கொள்ள நீங்கள் விரும்பினால் நீங்கள் தனியாக பிறிதொரு விணப்பத்தை அளிக்கலாம்.

புகலிடக்கோரிகளை உள்ளெடுக்கும் பிரிவிற்கு நீங்கள் வரும்பொழுது, நேர்காணல் அறைக்கு நீங்கள் அழைக்கப்படும் வரை பலநேரம் வரவேற்பில் காத்திருக்க வேண்டியிருக்கும ் . இதனால் நீங்கள் உண்பதிற்கும் குடிப்பதற்கும் ஏதாவது எடுத்து வரலாம். புகலிடக்கோரிக்கையாளர்களை உள்ளெடுக்கும் பிரிவில் குடும்பங்களை நேர்காணுவற்கு வசதியாக குடும்ப அறைகள் உள்ளது. குழந்தைகள் விளையாடுவதற்கு, வரைவதற்கு, மற்றும் தொலைக்காட்சி பார்ப்பதற்கும் வசதியாக தனி அறைகள் உள்ளது. இருப்பினும் உங்கள் குழந்தைகளைக் கவனிப்பதற்கு உறவினரையோ நண்பரையோ அழைத்துச் செல்லலாம் அல்லது வேறு பொழுது போக்கு நடவடிக்கைக்கானவற்றை எடுத்துச் செல்லலாம்.

புகலிடக்கோரிகள் பரிசோதனை நடவடிக்கையை பல பகுதிகளாகப் பிரிக்கலாம் அவை:

- உங்கள் டிழைஅநவசைஉ கைெழசஅயவழைெ (உயிர்த்தகவல்கள்) (உங்கள் கைவிரல் அடையாளம் மற்றும் புகைப்படம்) திரட்டுதல் உங்களுக்குத் தரப்படும்

அடையாள அட்டையில் திரட்டப்பட்ட் உங்கள் உயிர் அடையாளங்கள் பதியப்படும்˙. இது விண்ணப்ப பதிவு அட்டை (ARC) என அழைக்கப்படும˙. இதன் மூலம் நீங்கள் புகலிடம் கோரியமை உறுதிப்படுத்தப் படுவதுடன் உங்கள் அடையாளமும் Home Officė இல் பதிவு செய்யப்படும். UK இல் நீங்கள் தங்குவற்கு அனுமதிக்கப்பட்டால், ஐக்கிய ராச்சியத்தில் வசிப்பதற்கும் வேலை செய்வதற்கம் உரிமையுள்ள சகல வெளிநாட்டவருக்கு வழங்கப்படும் உயிர் தகவல்களைக் கொண்ட வதிவிட அனுமதி அட்டை மூலம் அது உறுதி செய்யப்படும். உயிர் தகவல்களைக் கொண்ட வதிவிட அனுமதி அட்டை உங்கள் குடிவரவு நிலையையும் ஐக்கிய ராச்சியத்தில் நீங்கள் தங்குவதற்கான உரிமையையும் ஊர்ஜிதம் செய்யும்.

- அடையாள மற்றும் பாதுகாப்பு சோதனைகளை மேற்கொள்ளல்
- உங்களுக்கு தங்குமிட வசதி தேவையா அல்லது இல்லையா என்பதை உறுதி செய்வதுடன் UK இல் எங்கு உங்களை தங்க அனுமதிப்பது என்பதை முடிவு செய்ய உதவியாக மேலதிக தகவல்களைப் பெறுவது.
- பரிசோதனை நேர்காணலை பூர்த்தி செய்தல். இதன் போது உங்களிடம் கேட்கப்படும் விடயங்கள்:
    - உங்கள் அடையாளம் தொடர்பான அடிப்படைக் கேள்விகளும் உங்கள் குடும்ப விபரங்களும்.
    - மீண்டும் எப்போ நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டும் என்பதை ஊர்ஜிதம் செய்தல் ( மேலதிக தகவல்களுக்கு மீண்டும் தொடர்பு கொள்ளுதல் பற்றிய பகுதியைப் பார்க்கவும˙)
    - ஐக்கிய ராச்சியத்திற்கு எவ்வாறு பயணம் செய்தீர்கள்
    - உங்களுக்கு ஏதாவது வைத்திய தேவை உள்ளதா.
    - ஏன் நாட்டைவிட்டு தப்பி வந்தீர்கள் என்பது பற்றி சுருக்கமான விளக்கம்.
    - ஏதாவது குற்றச் செயலுக்கு தண்டணைக்குள்ளாகி இருந்தால் அது தொடர்பான கேள்விகள் அத்துடன் தேசிய பாதுகாப்பு பற்றி தேவையான கேள்விகள்.ழ உங்கள் விரிவான விசாரணையை ஒரு ஆணா அல்லது பெண்ணா நடாத்துவது பற்றிய உங்கள் விருப்பம்.
    - நீங்கள் வீடற்றவராயின் உங்கள் குடும்ப தேவை பற்றி Home Office க்கு அறியத்தர வேண்டும். பரிசோதனை நேர்காணலுக்குப் பின்னர் தற்காலிக தங்குமிடம் வழங்கலாமா என்று ஹோம் ஆபீஸ் ஆழ்ந்து ஆராயும். இடம் இருக்கும் சாத தியகூரு பொருத்து முடிவு எடுக்கப்படும். உங்களுக்கோ அல்லது உங்களில் தங்கி இருப்பவர் எவருக் கேனும் வைத்திய தேவைகள் இருப்பின் Home Office க்கு அறியத்தர வேண்டும். அத்துடன்
    - மருந்து வகைகள் தீர்ந்து போய் விட்டால்
    - வைத்திய உதவி தேவைப் பட்டால்

- சித்திரவதையினால் பாதிக்கப் பட்டிருந்தீர்களாயிருந்தால்
- நீங்கள் கடத்தப்பட்டோ அல்லது கொடுமைப் படுத்தப் பட்டோ இருந்தால்
- உங்கள் பிள்ளைகளுக்கு வேறு பெற்றோர் ஐக்கிய ராச்சியத்தில் இருந்தால்.
- உங்கள் பிள்ளைகள் எவரேனும் இறுதிப் பரீட்சைக்கு தோன்ற இருப்பவர் என்றால்.
- நீங்கள் கர்ப்பமுற்றுள்ளீர்கள் என்றால்

நீங்கள் கொடுக்கும் தகவல்களைப் பார்த்து Home Office உங்களுக்கு எந்தப் பகுதியில் தற்காலிக தங்கும் வசதி வழங்குவதென்பதை முடிவு செய்யும். இத் தங்குமிடம் ஒரு தற்காலிக மையமாக இருக்கும். இத்தங்கும் இடத்தை நீங்கள் தெரிவு செய்ய முடியாவிட்டாலும் உங்கள் நிலைமையை Home Office கவனத்தில் கொள்ளும்.

உங்கள் விண்ணப்பம் பதிவு செய்யப் பட்ட பின்னர் உங்களைத் தடுத்து வைப்பதா என்பது பற்றி முடிவு எடுக்கப் படும். நீங்கள் தடுத்து வைக்கப்பட்டால் உங்கள் விண்ணப்பம் தடுத்துவைக்கப் பட்டவர்களுக்கான துரித தட (DFT) நடவடிக்கையின் பகுதியாக முடிவு செய்யப்படும். அதாவது உங்கள் விண்ணப்பம் விரைவாக முடிவு செய்யப்படும். நீங்கள் தடுத்து வைக்கப் பட்டால் அதற்கான காரணங்கள் உங்களுக்க விளக்கப் படும். DFT நடைமுறையின் ஒரு பகுதி என்ற ரீதியில் ஒரு இலவச சட்டப்பிரதிநிதியை ஏற்படுத்த சந்தர்ப்பம் உங்களுக்கு வழங்கப்படும். அத்துடன் உங்கள் புகலிடக் கோரிக்கை மீதான பூரண விசாரணை நடாத்தப்படும்.

புகலிடத்திற்கான உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் ஐக்கிய ராச்சியத்தில் இருந்து நீங்கள் அகற்றப்படும் வரை முடிந்தால் தடுத்து வைக்கப் படுவீர்கள். உள்நாட்டு மேன் முறையீட்டிற்கு தகுதி உடையவராயின் தடுப்பில் இருக்கம் பொழுது இது நடைபெறும்.

## 2.3 உண்மையாக இருத்தல் தேவை

உங்கள் கோரிக்கையின் சில அம்சங்களை Home Office˙ இடம் கூறத் தேவை இல்லை என உங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருக்கலாம் அல்லது முற்றிலும் மாறுபட்ட கதை ஒன்றைக் கூறும்படி ஆலோசனை வழங்கப் பட்டிருக்கலாம். இதை நீங்கள் செய்வீர்களேயானால் அது உங்கள் வழக்கிற்கு பாதகமாக இருப்பதுடன் உங்கள் கோரிக்கை நிராகரிக்கப் படுவதற்கும் வழி வகுக்கலாம். உண்மையைக் கூறுவது மிகவும் அவசியமானது

ஆதாரமற்ற அல்லது துஃபிரயோகவல்ல புகலிடக் கோரிக்கை, சந்தர்ப்பவாத அல்லது காலம் தாழ்ந்த கோரிக்கை ஒன்றை நீங்கள் முன்வைத்தால் உங்கள் கோரிக்கை அனேகமாக நிராகரிக்கப்படலாம் அத்துடன் உங்கள் கோரிக்கை பரிசீலிக்கப் பட்ட பின்னர் நாட்டில் இருந்து அகற்றப்படலாம். சில சந்தர்ப்பங்களில் நீங்கள் ஐக்கியராச்சியத்தைவிட்டு வெளியேறிய பின்னரே மேன்முறையீடு செய்யக் கூடியதாக இருக்கும்.

UK இல் தொடர்ந்து தங்கியிருக்க அனுமதிகோரி விண்ணப்பிக்கையில் அதற்கு ஆதாரமாக பொய்யான ஆவணங்களைச் சமர்ப்பித்தல் அல்லது ஏமாற்ற எத்தனித்தல் ஒரு கிரிமினல் குற்றமாகும். இவ்வாறு நீங்கள் செய்யும் பட்சத்தில் வழக்குதொடரப்பட்டு சிறைக்குச் செல்லநேரிடலாம்.

## 2.4 பரிசோதனை நேர்காணலின் போதுநீங்கள் எவற்றை எதிர்பார்க்கலாம்

உங்களது பரிசோதனை நேர்காணலின் போது Home Office சில அடிப்படைத் தகவல்களையே உங்களிடம் இருந்துபெறுவார்கள். உங்கள் தேவைகளையும் அவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். உங்கள் கோரிக்கையை எவ்வாறு முடிவசெய்வது என்பதையும் கணிப்பீடு செய்வார்கள். உதாரணமாக பாதுகாப்புபிரச்சனை இல்லாத நாடு ஒன்றில் இருந்து வரும் ஒருவர் என்றால் அனேகமாக நீங்கள் தடுத்துவைக்கப்பட்டு துரிதமாக முடிவு எடுக்கப்படும் (துரிததடத்தில் செல்லல் DFT) UK க்கு பயணிக்கும் வழியில் வேறு எதாவது பாதுகாப்பான நாடுஒன்றிற்கு சென்றிருந்து அந்நாட்டு குடிவரவு அதிகாரிகள் அதை அறிந்திருந்தார்கள் என்றால் உள்விவகாரப் பணியகத்தின் மூன்றாம் நாட்டு பிரிவுக்கு உங்கள் வழக்கு ஒப்படைக்கப்படலாம். இதன் அர்த்தம் என்னவென்றால் அந்த நாட்டு அதிகாரிகளிடம் உங்கள் புகலிடக் கோரிக்கையை பரிசீலிக்குமாறு Home Office அவர்களைக் கேட்டுக் கொள்ளலாம். இதன் அர்த்தம் நீங்கள் அந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பப்படாலாம். பாதுகாப்பு பிரச்சினை உள்ள நாடு ஒன்றில் இருந்து நீங்கள் வருகிறீர்கள் என Home Office முடிவு செய்தால் அது உங்கள் வழக்கை துரித தடத்தில் செல்ல அனுமதித்து விரைவாக உங்களுக்கு அகதி அந்தஸ்து பெறுவதற்கு வழிவகுக்கும். Home Office உங்களை நியாயமாகவும் திறந்த மனத்துடனும் நடாத்துவார்கள். பொருத்தமான சட்டத்தின் அடிப்படையிலேயே ஒரு முடிவு எடுக்கப்படும். நேர்முக தேர்வின் நகலை கேட்டு வாங்க உங்களுக்கு உரிமை உண்டு என்பதை குறித்து கொள்ளுங்கள்

## 2.5 மொழிபெயர்ப்பாளர்கள்

உங்களுக்கு தேவைப்படின் மொழிபெயர்ப்பாளர் ஒருவர் ஏற்பாடு செய்து தரப்படுவார். முன்கூட்டியே மொழிபெயர்ப்பாளரை ஏற்பாடு செய்து இருந்தால் அவர் பிரசன்னமாக இருப்பார். நாட்டிற்குள் பிரவேசிக்கும் பொழுது அல்லது முன் அறிவித்தல் இன்றி நேர்காணல் இடம் பெற்றால் மொழிபெயர்ப்பாளருக்காக நீங்கள் காத்திருக்க வேண்டியிருக்கும். உங்களுக்கு தேவை என்றால் ஒரு ஆண் அல்லது பெண் மொழிபெயர்பாலரை கோரலாம்

உங்களுக்கு பரிசோதனை நேர்காணலின் போது மொழிபெயர்ப்பாளர் ஒருவர் தேவைப்படின் Home Office அதனை ஏற்பாடு செய்து தரும். நீங்கள் கூறுவது அனைத்தையும் அவர் சரியாக மொழி பெயர்த்து வழங்குவதன் மூலம் Home Office நீங்கள் கொடுக்கும் சகல தகவல்களையும் பெற்றுக் கொள்ளும்.

நீங்கள் வழங்கும் தகவல்கள் அனைத்தின் ரகசியம் மொழிபெயர்ப்பாளர்களால் பேணப்படும்.

மொழிபெயர்ப்பாளர் பற்றி உங்களுக்கு ஏதாவது பிரச்சினை இருந்தால் உதாரணமாக அவர் பேசுவதைப் புரிந்து கொள்ள முடியாமல் இருந்தால் நேர்காணும் அதிகாரிக்கு அறியத்தாருங்கள். உங்கள் வழக்கின் முடிவினை அது எந்தவிதத்திலும் பாதிக்காது.

## 2.6 எவ்வாறு முறைப்பாடு செய்வது.

வழங்கப்பட்ட சேவைகள் பற்றி நீங்கள் மகிழ்ச்சி அடையவில்லை என்றால் அல்லது Home Office இன் பணியாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் அல்லது Home Office உடன் தொடர்பு உடைய எவரேனும் உங்களை மரியாதையுடனும் கௌரவத்துடனும் நடாத்தவில்லை என்று உணர்கிறீர்கள் என்றால் அல்லது அவர்களது தொழில்சார் நடாத்தை பற்றி கவலைப் பட்டால் நீங்கள் முறைப்பாடு செய்யலாம் சம்பவம் நடந்த பின் எவ்வளவு விரைவில் செய்ய முடியுமோ அவ்வளவு விரைவாக முறைப்பாட்டை செய்வது முக்கியம் மூன்று மாதங்களுக்கு பழைமையான முறைப்பாடுகளை வழமையாக Home Office விசாரிக்காது

எழுத்து மூலமாக உங்கள் முறைப்பாட்டைச் செய்ய வேண்டும். ஆங்கிலத்தில் அல்லது வேல்ஸ் மொழியில் மட்டுமே இதனைச் செய்ய முடியும் நீங்கள் UK இல் இருப்பவர் என்றால் இதனை அனுப்ப வேண்டியது

- மின் அஞ்சல்: complaints@homeoffice.gsi.gov.uk.மின் அஞ்சல் மூலமாக செய்யப்படும் முறைப்பாடுகளுக்கு Home Office வழமையாக விரைவாகப் பதில் அளிக்கும்
- தபால் மூலம் UKVI, Complaints Allocation Hub, 11 வது மாடி Lunar House, Wellesley Road, Croydon, CR9 2BY

பின்வரும் விடயங்கள் அதில் இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

- உங்கள் பெயர் மற்றும் தொடர்பு விபரங்கள்
- முறைப்பாடு சம்பந்தமான சகல விபரங்கள் ( நேரம், திகதி மற்றம் இடங்கள்
- நீங்கள் தொடர்பு கொண்ட UK விசா மற்றும் குடிவரவு இன் பணியாளர்கள் அல்லதுஒப்பந்தக் காரர்களின் பணியாளர்களின் பெயர்கள் அல்லது அடையாள இலக்கங்கள்
- சாட்சிகளின் விபரங்கள் ( பொருத்தம் என்றால் )
- தேவையான கடிதங்கள் அல்லது வேறு ஆவணங்களின் பிரதிகள்
- உங்கள Home Office இன் பதிவு இலக்கம்

உங்கள் முறைப்பாடு Home Offices Customer Service Units (CSUS). இனால் கையாளப்படும் உங்கள் முறைப்பாடு நேரத்திற்கு திருப்திகரமாக தீர்த்து வைப்பதற்கு அவர்கள் பெறுப்பானவர்கள் Home Office உங்களுக்கு பெற்றுக் கொண்டதற்கான கடிதம் ஒன்று அனுப்புவார்கள் அதில் உங்கள் முறைப்பாட்டை யார் கவனிக்கின்றார்கள்

என்பதைத் தெரிவிப்பார்கள் வழமையாக 20 நாட்களுக்குள் முழுமையான பதில் தருவார்கள் இருப்பினும் உங்கள் முறைப்பாட்டில் பாரிய தொழில்சார் துர்நடத்தை பற்றி குற்றம் சாட்டப் பட்டிருந்தால் சுயாதீனமான விசாரணை ஒன்று இடம்பெறுவதற்கு 12 வாரங்கள் ஆகலாம் முறைப்பாடு செய்வதால் உங்கள் வழக்கின் முடிவில் அல்லது முடிவு செய்யப்படும் விதத்தில் பாதகமான பாதிப்பை ஏற்படுத்தாது.
இது தொடர்பாக மேலதிக தகவல்கள் தேவை எனின் தொடர்பு கொள்ள:
புகலிடம் அறிவுரை UK on 0808 8000 642

## 2.7 புகலிடக்கோரிகளை உள்ளெடுக்கும் பிரிவுக்குச் செல்லும் பொழுது எடுத்துச் செல்ல வேண்டிய ஆவணங்கள்

உங்கள் புகலிடக் கோரிக்கைக்கு வலுச்சேர்க்க ஏதுவாக உங்கள் வசமுள்ள ஆவணங்கள் அனைத்தையும் நேரத்திற்கு சமர்ப்பியுங்கள்

கடவுச்சீட்டு உங்கள் கடவுச்சீட்டும் உங்கள் விண்ணப்பத்துடன் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள உங்களில் தங்கியிருப்பவர் எவரேயினதும் கடவுச்சீட்டுகள்.

பயணப் பத்திரங்கள் உங்களிடம் உள்ள பயணச்சீட்டுகள் மற்றும் விமான அனுமதிச்சீட்டுகள்.

போலிஸ் பதிவு சான்றிதழ்கள் நீங்களோ உங்கள் குடும்பமோ வைத்திருந்தால்

வேறு ஏதாவது அடையாள ஆவணங்கள் அடையாள அட்டைகள், பிறப்பு ∴ திருமண ∴ பாடசாலை ,பாடசாலை சான்றிதழ்கள் அங்கத்தவர் அட்டைகள், போன்றவை. Home Office உங்கள் அடையாளத்தையும் தேசியஇனத்தையும் உறுதி செய்வதற்கு இது உதவியாக இருக்கும்.

மருத்துவ ஆவணங்கள்- உங்கள் மருத்துவத் தேவைகளின் விபரங்கள் மற்றும் உட்கொள்ளும் மருந்து வகைகளின் விபரங்கள் அனைத்தும் Home Office க்கு தெரியப்படுத்த வேண்டும்.

உங்கள் தங்குமிடத்திற்கான ஆதாரங்கள் நீங்கள் ஏற்கனவே ஐக்கிய ராச்சித்தில் வசிப்பவராயின் நீங்கள் தங்கியிருக்கும் இடம் தொடர்பாக வாடகைக் குடியிருப்பு ஒப்பந்தம் அல்லது உங்கள் முழுப் பெயர் மற்றும் ஐக்கிய ராச்சியத்தில் விலாசம் அடங்கிய விவரம் பற்றுச் சீட்டுகள் ( மின்சாரம், எரிவாயு போன்ற ) ஆவண ஆதாரங்களை Home Office உங்களிடம் கேட்கும்
. வேறு ஒருவரின் வீட்டில் நீங்கள் வசிப்பவராயின் நீங்கள் அங்கு தொடர்ந்து வசிக்க முடியுமா இல்லையா என்பதை உறுதி செய்யும் கடிதம் உங்கள் வீட்டு உரிமையாளரிடம் இருந்து பெற்றுக் கொண்டு வரவும். அத்துடன் வீட்டு உரியமையாளரின் முழுப்பெயர் மற்றும் விலாசம் அடங்கிய பற்றுச் சீட்டுகளை ஆவண ஆதாரங்களாக கொண்டு வரவும்.

உங்களுக்கு தற்காலிக தங்குமிடம் தேவைப்படின் தற்போது வசிக்கும் இடத்தில் ஏன்

தொடர்ந்து வசிக்க முடியாது என்பதற்கான ஆதாரங்களகை கொண்டு வரவும். ஏன் உங்களுக்கு உதவி இல்லை ? ஹோம் ஆபீஸ் உங்களுக்கு இங்கோ அல்லது வெளி நாட்டிலோ உதவி கிடைக்குமா என்று பார்க்கும்
உங்கள் விண்ணப்பம் பரிசீலனையில் இருக்கும் வரை உங்கள் ஆவணங்களின் மூலப்பிரதிகள் Home Office ன் வசம் இருக்கும். உங்கள் வழக்கு முடிந்த பின்னர் தான இவ் ஆவணங்கள் உங்களுக்கு திருப்பிக் கொடுக்கப்படும் என்பதால் இவற்றின் பிரதி ஒன்றினைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்

## 2.8 தங்குமிடமும் புகலிடம் ஆதரவும்.

உங்களது பரிசோதனை நேர்கணலின் போது உங்களுக்கு தங்குமிட வசதியும் ஆதரவும் தேவையா எனக் கேட்கப்படும். நீங்கள் அதற்கு தகுதியானவரா என்பது பரிசீலிக்கப் படும். உங்களுக்கு உதவி புரியக்கூடிய தகுதிகளை குறித்து ஹோம் ஆபீஸ் எல்லா ஆராய்வுகளையும் செய்யும்

உங்களுக்கு தங்குமிட வசதியும் ஆதரவும் தேவைப்படின்:
உங்களுக்கு தங்குமிட வசதி தேவைப்படின் நேர்காணலுக்கு உங்கள் உடைமைகளுடன் செல்வது முக்கியமாகும். உங்களுக்கு தங்குமிட வசதி தேவை என ஏற்றுக் கொள்ளப் பட்டால் உங்களை காத்துக்கொள்ள வழி இல்லைஎன்றால் பின்பு நேர்காணலின் பின்பு தற்காலிக முதற்க்கன் தங்குமிடம் ஒன்றிற்கு நேரடியாக அனுப்பப் படுவீர்கள். இது பல மைல்களுக்கு அப்பால் இருக்கலாம். உங்களுக்கு ஏதாவது அவசரத் தேவை இருப்பின் அதிகாரியிடம் தெரிவிக்கவும் ஏனெனில் இது நீங்கள் எந்த இடத்துக்கு அனுப்பப் படுகிறிர்கள் என்பதைத் தீர்மானிக்கும். இத் தற்காலிக தங்குமிடத்தில் அனேகமாக 21 நாட்கள் தங்கியிருக்க நேரிடும். இருப்பினும் உங்கள் தனிப்பட்ட சூழலைப் பொறுத்து இது நீடிக்கலாம்.

உங்களை நீங்களே பார்துக் கொள்ள உங்களிடம் வசதி இல்லாவிட்டால் அதை Home Officė க்கு நிரூபிப்பது முக்கியமாகும். ஐக்கிய ராச்சியத்திலும் அதற்கு வெளியிலும் உங்கள் பொருளாதார நிலைமை பற்றி Home Officė பார்க்கும். உங்களை நீங்களே பார்த்துக் கொள்ளும் ஏதேனும் வசதி உங்களுக்கு இருக்குமேயானால் அல்லது உங்களுக்கு தங்குமிடமும் உணவும் வழங்கக் கூடிய உறவினர்களோ நண்பர்களோ இருப்பார்களேயானால் உங்களை நீங்களே கவனித்துக் கொள்ள வேண்டும் என்பதையே Home Officė உங்களிடம் இருந்து எதிர் பார்க்கும்.

Home Officė உங்களிடம் இருந்து எதிர்பார்க்கும் விடயங்கள்: உங்களை குறித்தும் உங்களை சார்ந்தவர்களை குறித்தும் குறிப்பிட்ட சாட்சியங்களை எதிர்பார்க்கும்

- வங்கி அறிக்கைகள். இந்த நாட்டிலோ அல்லது வேறு நாட்டிலோ உள்ள எல்லா 6 மாத கணக்கு . அவர்கள் மேலும் உங்கள் பணம் உங்கள் கணக்கில் இருந்து வேறு கணக்கிற்கு மாற்றம் செய்யபட்டதா அல்லது உங்களுக்கு அதில் தொடர்பு இருக்கிறதா என்று சோதிக்கும்
- சொத்து விபரங்கள் இவைகளை விற்றால் உங்களை காத்துக்கொள்ள உதவுமா

- UK இல் ஏதாவது வேலை செய்திருந்தீர்களேயானால் அது பற்றிய தகவல்கள். p45 யின் நகல் வேண்டும் அல்லது நீங்கள் பணிபுரிந்த இடத்தில இருந்து இது முடிவுபெற்றது , எப்போது முடிவுபெற்றது என்று கடிதம் வேண்டும்
- உங்கள் வருமானம் வரவு , ஒப்பந்தம் , செலவு செய்தததற்கு சாட்சி பற்றிய விபரங்கள் மற்றும் இது எவ்வாறு செலவு செய்யப்பட்டது பற்றிய விபரங்கள்.
- எதாவது பெறுமதிமிக்க நகைகள்
- UK இல் அல்லது வெளிநாட்டில் உள்ள சொத்துகளின் விற்க முடியுமா என்று ஊர்ஜிதம் செய்யவேண்டும் விபரங்கள்
- கையில் இருக்கும் பணம் மற்றும் எவ்வளவு இந்த நாட்டிற்க்கு கொண்டு வந்தீர்கள்
- UK இல் எதாவது சலுகைகள் பெறுபவராயின் அதன் விபரங்கள் இந்த தொகை எப்படி வந்தது எப்போதெல்லாம் வந்தது மற்றும் எப்போது வருவது நின்றது என்பதை அத்தாட்சி உடன் விளக்கவும்

ஆரம்பத்தில் விடுதி போன்ற இடத்தில் தங்க வைக்கப் படுவீர்கள். அடிப்படை உணவும் சுகாதாரப் பொருட்களும் வழங்கப்படும். இவ்விடத்தில் தங்கியிருக்கையில் உங்களுக்கு பொருளாதாரக் கொடுப்பனவு எதுவம் வழங்கப்பட மாட்டாது. ஸ்காட்லாந்தில் ஆரம்ப தங்குமிடம் தில் தானாக சமைத்துக்கொள்ள வேண்டும் . அவர்களுக்கு உணவுக்கும் இதற தேவைகளுக்கும் 5 பவுண்ட் கொடுக்கப்படும்

உதவிக்கான உங்கள் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டால் பரவலாக்கலுக்கான தங்குமிடம் ஒன்றிற்கு மாற்றப் படுவீர்கள். இது UK˙ இன் எந்தப் பகுதியிலேனும் இருக்கலாம். இதை நீங்கள் தெரிவு செய்ய முடியாது.
இதனால் நீங்கள் தங்கப் போகும் இடம் மற்றும் மாதிரி யை நிர்ணயிக்கும் ஏதாவது விடயங்கள் இருந்தால் அது பற்றி முன்கூட்டியே Home Officė க்கு தெரியப்படுத்துவது முக்கியமானது. வீண்ணப்பப் படிவத்தை நிரப்புகையிலேயே இதனைச் செய்வது முக்கியமானது. இல்லையேல் உங்கள் தேவைகளுக்கு ஒவ்வாத இடத்தில் தங்க வேண்டி வரும்.

Asylum Support Application UK இல் உள்ள உங்கள் வழக்கு அலுவலருடன் உதவிக்கான விண்ணபத்தை பூர்த்தி செய்கையில் உங்கள் தேவை பற்றி கலந்து உரையாடுங்கள்

நீங்கள் நண்பர்களிடமோ உறவினர்களிடமோ தங்கி இருந்து இப்போது வேறு இடத்தில் தங்க வேண்டுமானால் நீங்கள் உடனடியாக புகலிடம் உதவி யை 0808 8000 631 நாட வேண்டும் . தங்க இடமில்லாமல் போகும்வரை காத்திருக்க கூடாது . நீங்கள் தற்சமயமாக ஒரு இடத்தில் தங்கி இருந்தால் அங்கேயே ஹோம் ஆபீஸ் உங்களுக்கு பரிந்துரை செய்யும் வரை தங்கி இருக்கவும்

தங்குமிடம் ஒன்றிற்கு காத்திருக்கையில் நண்பர் ஒருவருடன் தங்கினால் நீண்டகால

தங்குமிடம் ஒன்றிற்கு மாற்றல் ஆகும் வரை பொருளாதார உதவி கிட்டாது.

தங்குமிடம் உங்களுக்கு தேவை இல்லை எனில்
நீங்கள் நண்பர்கள், உறவினர்களுடன் தங்குகின்றீர்கள் என்றால் அங்கு தொடர்ந்து தங்க முடியும் என்பதற்கு ஆதாரத்தைக் காட்ட வேண்டும்.. உங்களுக்கு அவர்கள் தங்குமிடம் மட்டும் கொடுக்கக் கூடியதாக இருந்து வேறு உதவிகள் செய்ய முடியாது விட்டால˙ நீங்கள் பொருளாதார உதவிக்கு (அத்யாவசியப் பொருட்கள் மட்டும்) விண்ணப்பிக்கலாம்.

அத்தியாவசியப் பொருட்களுக்கான உதவி உங்களுக்கு தேவை இல்லை எனின் நண்பர்கள்˙ மற்றும் குடும்பத்தவர்களால் உணவு மட்டும் கொடுக்க முடியும் அல்லது குறைந்த வருமானம் உடையவர்கள் என்றால் Home Office. இல் தங்குமிடத்திற்கு மட்டும் விண்ணப்பிக்கலாம்.

உங்களுக்கு உதவி தேவை எனின் அதற்காக விண்ணப்பிக்க Asylum Support Application UK யை தொடர்பு கொள்வது முக்கியம்.

Asylum Support Application UK 0808 8000 643 ஐ
www.asylumhelpuk.org இல்

நண்பர் ஒருவருடன் தங்கியிருந்து கொண்டு அத்தியாவசியத் தேவைக்காக விண்ணப்பிக்கின்றீர்கள் என்றால் உங்களுக்கு ஆதரவு தேவை எனக் கணிப்பீடு செய்யப்படும் வரை பணக்கொடுப்பனவு ஆரம்பிக்காது.

நீங்கள் ஐக்கியராச்சித்தில் நீண்டகாலமாகத் தங்கி இருந்து முடிந்த அளவுக்கு விரைவாக புகலிடம் கோரவில்லை என்றால், Home Office இன் உதவி நிராகரிக்கப் படலாம்.

உங்களுக்கு போதுமான தங்குமிட வசதி இல்லை என்று அத்துடன் அல்லது வாழ்க்கைக்குத் தேவையான பொருட்கள்( உணவு, வெப்பம்) இல்லை என்று, அல்லது உங்களுக்கு உதவி மறுக்கப்பட்டால் அது உங்கள் மனித உரிமையை மீறும் செயல் என்று நீங்கள் நிரூபிக்கத்தவறினால் Home Office க்கு உதவி மறுக்கும் உரிமை உண்டு.

## 2.9 என்னை நானே கவனிக்க முடியாதவர் என்றால்

உங்களது பரிசோதனை நேர்காணலின் போது Home Office உங்களை தேவையை மதிப்பீடு செய்யும். உங்களை நீங்கள் கவனிக்க முடியாதவர் என அது முடிவு செய்யலாம்.

இது உடல் ஊனம், பாரிய சுகயீனம், கற்றலுக்கான ஆற்றலின்மை, மன ஆரோக்கியப் பிரச்சினைகள் அல்லது முதுமையால் ஏற்படும் இயலாமை போன்றவற்றின் விளைவாக இருக்கலாம்.. இதில் ஏதாவது ஒன்றாக இருந்தால் சமூகப் பராமரிப்புக்கான கணிப்பீடு ஒன்று செய்யப்பட்ட பின் சமூக சேவையின் கவனத்திற்கு அனுப்பப்படலாம்.

தெளிவான மற்றும் உடனடித் தேவை உங்களுக்கு இருக்குமேயானால் உங்களை ஆதரிக்கும் பொறுப்பு உள்;ர் ஆட்சியின் உடையதாகும். இவ் ஆதரவு தங்குமிடம் மற்றும் பொருளாதார உதவியாக இருக்கலாம்.

உங்களுக்கு தெளிவான மற்றம் உடனடி தேவை இல்லை எனினும் மேலதிக உதவி தேவைப்படுபவர் ஆயின் உங்களை நீண்டகால தங்குமிடத்திற்கு மாற்றம் செய்யும் பொழுது சமூகப் பராமரிப்பு கணிப்பீடு ஒன்று செய்யப்படும். உங்களுக்கு மேலதிக உதவி (உதாரணமாக கருவிகள்) தேவையா என்பதை இக்கணிப்பீடு முடிவு செய்யும்.

தெளிவான பராமரிப்புத் தேவையுடைய குழந்தை ஒன்று உங்கள் வீட்டில் இருக்குமேயானால் (உதாரணமாக பாரிய ஊனம் அல்லது சுகயீனம்) அக்குடும்பம் புகலிடக்கோரிக்கை நடைமுறையில் இருக்கும் வரையில் தேவையான பராமரிப்பை உறுதி செய்வது உள்;ர் ஆட்சியினுடையது. சரியான பராமரிப்பை உறுதி செய்வதற்கு குழந்தைகள் சேவைக்கு பரிந்துரை செய்யப்பட வேண்டும்

இதைச் செய்வதற்கு வழிகாட்டுதலும் ஆலோசனையும் தேவை எனின் தயவு செய்து தொடர்பு கொள்ள

Asylum Advice UK 0808 8000 642
www.asylumhelpuk.org

## 2.10 பரிசேதனையின் போது வழங்கப்படும் ஆவணங்கள்

விண்ணப்ப பதிவு அட்டை ( ARC )
உங்களுக்கு ஒரு விண்ணப்ப பதிவு அட்டை( ARC ) தரப்படும். நீங்கள் புகலிடம் கோரி விண்ணப்பித்துள்ளீர்கள் என்பதைக் காட்டும் இது ஒரு முக்கிய ஆவணமாகும். உங்களுடைய ARC அட்டையை கொடுக்க பட்டிருக்காத பட்சத்தில் ஏற்றுக் கொண்டதற்கான வழமையான கடிதம் (SAL) ஒன்று தரப்படும். உங்கள் விபரங்கள் மற்றும் புகைப்படம் இணைக்கப்பட்ட இது நீங்கள் புகலிடம் கோரியுள்ளதை ஊர்ஜிதம் செய்யும். எப்போது எங்கே மாற்றிகொள்ளலாம் என்று உங்களுக்கு கடிதம் மூலம் தெரிய படுத்த படும் . இது குறித்து விபரம் கிடைக்காவிடில் சென்ட்ரல் எவன்த்ஸ் புக்கிங் (CEBU க்கு 0300 123 2235 தொலைபேசி மூலம் அணுகவும் - திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9:00 முதல் மாலை 3:00 வரை தொலைபேசி இயங்கும்

உங்கள் தனிப்பட்ட விபரங்கள் மற்றும் புகைப்படம் ARC யில் பதிந்து இருக்கும். இதைச் சோதிப்பது உங்கள் கடமை உங்கள் ARC இல் உள்ள விபரங்கள் சரியானவையா என்பதை நீங்கள் சோதித்துப் பார்ப்பது மிகவும் முக்கியம். உங்கள் பெயர் பிறந்த திகதி (D.O.B) மற்றும் பூர்வீக நாடு பற்றிய விபரங்கள் சரியாகப் பதிவு செய்யப் பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். புதிவு செய்த பின்னர் மாற்றுவதென்பது கடினமானதாகும்.

உங்கள் அந்தஸ்து மீது எதாவது நிபந்தனைகள் இருந்தால் அவற்றை இவ் அட்டை உறுதி செய்யும். உங்களுக்க வேலை செய்ய அனுமதி உள்ளதா என்பதை உங்கள்

ARC உறுதி செய்யும். புகலிடம் கோரும் முன் உங்களுக்கு வேலை செய்ய அனுமதி இருக்கவில்லை என்றால் புகலிடம் கோரி விண்ணப்பிக்கையில் வேலை செய்ய அனுமதி தரப்பட மாட்டாது. இவ் அட்டை உங்களுக்கு வேலை செய்யத் தடையுள்ளது என்பதைத் தெரிவிக்கும்

ARC அட்டை உங்கள் அடையாளத்தை நிருபிக்காது. நீங்கள் புகலிடம் கோரிய போது கொடுத்த தகவல்களே அங்கு பதிவு செய்யப் பட்டுள்ளது. நீங்கள் பொருளாதார உதவி பெறுபவர் ஆயின் அதனைப் பெற்றுக் கொள்ளும் போது ARC அட்டை தேவைப்படும்.

குடும்ப அங்கத்தவர் ஒவ்வொருவருக்கும் ஒரு ARC அட்டை தரப்படும். இதனைப் பத்திரமாக வைத்திருத்தல் அவசியம். நீங்கள் புகலிடம் கோருபவரோ அல்லது கோரி நிராகரிக்க பட்டவரோ , 18 வயதிற்கு மேற்ப்பட்ட வராக இருந்து நீங்களோ அல்லது உங்களுடன் இருப்பவரோ -உங்கள் ARC தொலைந்தோ , களவு போயோ அல்லது சேதம் அடைந்தோ இருந்தால் உடனடியாக புகலிடம் உதவி யை நாடுங்கள் , அவர்கள் அதனை உடனே ஹோம் ஆபீசெக்கு தெரியபடுத்த உதவு வார்கள்

நீங்கள் இந்த நாட்டின் தகுதி உள்ளவராக இருந்தாலோ அல்லது சிறியவர்களாக இருந்தாலோ நீங்கள் ஹோம் ஆபீஸ் ஐ நேரடியாக தொடர்ப்பு கொள்ளலாம் . தொடர்பு கொள்ள வேண்டிய எண் 0300 123 2235. தொலைந்ததா , களவு போனதா அல்லது சேதம் அடைந்ததா என்று தெரியபடுத்தவும்

உங்கள் ARC யை பாவித்து வாராந்தக் கொடுப்பனவை தபால் அலுவலகத்திலிருந்து பெறுபவராயின் புகலிட ஆதரவுப் பிரிவுக்கும் இதனை தெரிவிக்க வேண்டும். நீங்கள் 0808 8000 642 புகலிடம் அறிவுரை யை அழைக்கும் பொது தயவு செய்து இந்த தகவலை வைத்து கொள்ளவும் உங்கள் பணம் அல்லது வீட்டிற்கான ஆதரவு வழங்கும் பிரிவு பற்றிய விபரங்களை Home Office இல் இருந்த வந்த கடிதத்தில் காணலாம். புதிய அட்டை ஒழுங்கு செய்யப்படும் வரை அவசரத்தேவைக்கான பணத்தை அனுப்புவதற்கு அவர்கள் ஏற்பாடு செய்வார்கள். புதிய ARC பெற்றுக்கொள்ள அருகில் உள்ள தகவல் மையத்தில் உங்களுக்கு ஓர் சந்திக்க முன்பதிவு வழங்கப்படும் . நீங்கள் உங்கள் சொந்த பணத்தை உபயோகித்து இங்கு வந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

இது தொடர்பாக மேலதிக ஆலோசனையும் வழிகாட்டலும் தேவை எனின் Asylum Advice UK ஐ 0808 8000 642 இல் தொடர்பு கொள்ளலாம்.

புதிய ARC கிடைத்ததும் உங்கள் வழக்கமான உதவியை மீண்டும் அதில் பெற்றுக்கொள்ளலாம்

## 2.11 ஆஜர் ஆகுதல் IS96.

ஒவ்வொரு வாரம் ∴ மாதம் ஒரு குறித்த நேரத்தில் குடிவரவு அதிகாரி முன்னிலையில் ஆஜர் ஆகும்படி உங்களுக்கு கூறப்பட்டிருக்கலாம். IS96 எனஅழைக்கப்படும் ஆவணம் ஒன்று உங்களுக்கு தரப்பட்டிருக்கும். நீங்கள் ஆஜராவதற்கான நிபந்தனைகள் மற்றும்

UK உள் தற்காலிகமாக நீங்கள் அனுமதிக்கப்பட்ட சூழல் பற்றிய விபரங்கள் அதில் உள்ளது

தடுத்து வைக்கப் படாத புகலிடக் கோரிக்கையாளர்களில் அனேகமானோர் பொலிஸ் நிலையத்திலோ அல்லது ஆஜர் மையம் ஒன்றிலோ ஆஜர் ஆக எதிர்பார்க்கப் படுகின்றது.

உங்கள் ஆஜர் மையத்தில் இருந்து மூன்று மைல்களுக்கு அப்பால் வசிக்கும் Home Office இல் இருந்து உதவி பெறும் புகலிட விண்ணப்பதாரர் நீங்கள் என்றால் ஆஜர் ஆவதற்கு செல்ல தேவைப்படும் பயணச்சீட்டை பெறுவதற்கு உதவி பெறலாம். முதல் தடைவை ஆஜர் ஆகும் பொழுது Home Office இல் இருந்து உதவி பெறுவதற்கான ஆதாரத்தை எடுத்துச் செல்ல வேண்டும். அதன் பின்னர் நீங்கள் ஆஜர் ஆவதற்கு உதவியாக உங்களுக்கு பயணச்சீட்டுகள் தரப்படும். பொதுவாக இவை ஆஜர் ஆகும் மையங்களில் கொடுக்கப் படும். அனேகமாக உங்கள் முதல் பயணத்தை நீங்களே ஒழுங்கு செய்ய வேண்டியிருக்கும். இதற்கான செலவை மீளப் பெற முடியாது.

ஒவ்வொரு முறையும் நீங்கள் ஆஜர் ஆகும் பொழுது உங்கள் IS96 மற்றும் ARC அட்டையை உடன் எடுத்துச் செல்லவும். (கொடுக்க பட்டால் மட்டும்) இவற்றை நீங்கள் காட்ட வேண்டியிருக்கும்

நீங்கள் Home Officeஇல் உதவி பெறுபவர் இல்லை என்றால் விசேட சூழ்நிலைகளில் பயண சீட்டு பயணச் செலவீனங்களுக்கு விண்ணப்பிக்கலாம். நீங்கள் ஆஜர் ஆகும் பொழுது குடிவரவு அதிகாரியியிடம் இதற்கான விண்ணப்பப் படிவத்தை கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் பயணத்திற்கான பணவசதி இல்லை என்பதற்கான ஆதாரத்துடன் எழுத்து மூலம் உங்கள் கோரிக்கையை கொடுக்க வேண்டும்.

## 2.12 ஆஜர் ஆகத் தவறினால்

ஒவ்வொரு குறிப்பிட்ட தினத்தில் ஆஜராவது முக்கியம். உங்களால் ஒரு குற்ப்பிட்ட தினத்தில் ஆஜராக முடியாவிட்டால் அத்திகதிக்கு முன்னராகவே IS96 கொடுக்க பட்டுள்ள எண்ணில் ஆஜர் மையத்துடன் தொடர்பு கொண்டு ஆஜர் ஆவதை நிறுத்தி வைக்குமாறு கோர வேண்டும். உங்கள் கோரிக்கைக்கான ஆதாரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.. உதாரணமாக சுகயீனம் காரணமாக செல்லவில்லை என்றால் வைத்திய ஆதாரம் காட்ட வேண்டும்.

நீங்கள் நிறைமாதக் கர்ப்பிணி என்றால் குழந்தை பிரசவிக்கும் வரையில் ஆஜர் ஆவதை நிறுத்தி வைக்கும் படி கேட்கலாம். உங்கள் தாய்மைச் சான்றிதழ் (MAT B1) உடன் செல்ல வேண்டும். உங்கள் வைத்தியர் அல்லது சுகாதார அலுவலரிடம் இருந்து இதனைப் பெறலாம். உங்கள் ஆஜர் திகதிகள் பிரவசத்திற்கு பிந்திய திகதிகளுக்கு பிற்போடப்படும். அறிக்கை கொடுக்கும் இடத்திற்கு செல்ல இயலாமல் போனால் , அறிக்கை மையத்திற்கு உடனடியாக தொடர்பு கொள்ளவும் அல்லது உங்கள் சட்ட நிபுணரை தொடர்பு கொள்ளவும் . அவர்கள் இதை குறித்து உங்களுக்கு உதவு வார்கள்

## 2.13 ஆஜர் ஆகும் பொழுது கொண்டு செல்ல வேண்டிய ஆவணங்கள்.

ஆஜர் மையத்திற்கு செல்லும் பொழுது உங்களுடன் IS96 (ஆஜர் பத்திரம்) மற்றும் ARC அட்டையை எடுத்துச் செல்ல வேண்டும். UK. உள் அனுமதித்த போது விதிக்கப்பட்ட ஆஜராவதற்கான நிபந்தனைகளுக்கு இசைவாக நடந்து கொள்கிறீர்கள் என்பதை உறுதி செய்வதற்கு உங்கள் ARC அட்டை புதுப்பிக்கப்படும். ஆஜர் ஆகத்தவறினால் அல்லது உங்கள் அட்டையை உங்களுடன் எடுத்துச் செல்லத் தவறினால், ஆஜர் மையத்தை நீங்கள் தொடர்பு கொண்டு அட்டையைப ் புதுப்பிக்கும் வரையில் தபால் அலுவலகத்தில் உங்களுக்கான கொடுப்பனவை நிறுத்தும் வகையில் இவ் அட்டை திட்டமிட்டுத் தயாரிக்கப் பட்டுள்ளது. தபால் அலுவலகத்தில் உங்களுக்கு குறியீடு 4 என்ற தவறுக்கான பற்றுச் சீட்டு தரப்படும். ஆஜராகத் தவறி Home Officė உடன் தொடர்பு கொள்ளத் தவறினால் உங்கள் கொடுப்பனவு இடைநிறுத்தம் செய்யப்படும் அத்துடன் சிலசமயங்களில் முற்றாக நிறுத்தப்படவும் கூடும். மேற்கொண்டு நீங்கள் உங்கள் உதவியை பெற தொடர வேண்டுமானால் , அருகாமையில் உள்ள அறிக்கை மையத்தில் செல்லவேண்டும் , அவர்கள் அதை புதுப்பித்து தருவார்கள்

## 2.14 சட்ட ஆலொசனை.

முதல் சந்தர்ப்பத்திலேயே சட்ட ஆலோசகர் ஒருவருடன் நீங்கள் பேசுவது முக்கியம்.

புகலிட நடைமுறை பற்றி சட்ட ஆலோசகர் விபரங்களைத் தருவதுடன் உங்கள் ஆவணங்களை மொழி பெயர்ப்பதற்கு உதவி செய்வார். அத்துடன் Home Officė க்கு சமர்ப்பிக்க வேண்டிய மேலதிக அறிக்கைகளையும் தயார் செய்வார்.

கீழ்கண்ட அமைப்புகளில் ஒன்றிலேனும் உங்கள் சட்டப் பிரதிநிதி பதிவு செய்யப்பட்டவர் என்பதை நீங்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.:

- தகுதி பெற்ற சட்டத்தரணியாக இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் சட்டத்தரணிகள் சங்கம்
- தகுதி பெற்ற சட்டத்தரணியாக ஸ்கொட்லாந்து சட்டத்தரணிகள் சங்கம்
- தகுதி பெற்ற சட்டத்தரணியாக வட ஐயர்லாந்து சட்டத்தரணிகள் சங்கம்
- குடிவரவுச் சேவைகள் ஆணையாளர் அலுவலகம். (Office of the Immigration Services Commissioner (OISC) இ)இங்க 2ம் 3ம் படிகளில் உங்ள ஆலோசகர்களின் பட்டியல் உண்டு. 2ம் 3ம் படிகள் என்றால் இவ ஆலோசகர் புகலிடக் கோரிக்கைக்கான விண்ணப்பம் தொடர்பாகவும் புகலிட விடயங்களில் உங்களைப் பிரதிநித்துவம் செய்யவும் தகமை பெற்றவர்.
- யாருடன் பதிவு செய்துள்ளார்கள் என்பதை உங்கள் வழக்குரைஞரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். உங்கள் சட்டப்பிரதியிடம் இருந்து கிடைக்கும எலலாக் கடிதங்களிலும் மேற்கூறிய அமைப்புகளின் இலச்சினை இருக்கும். உங்கள் சட்டப்பிரதிநிதி பதிவு செய்யப் பட்டிருக்கம் அமைப்பிடம் இருந்து நீங்கள்

நேரடியாகவும் அறிந்து கொள்ளலாம்.

இலவச சட்ட ஆலோசனை
சட்ட உதவிக்கு தகுதி உடையவர் என்றால் புகலிடக் கோரிக்கையாளர் என்ற ரீதியில் இலவச சட்ட ஆலோசனை பெறுவதற்கு உரிமை உடையவர் ஆக இருக்கலாம். உங்களைக் சோதனைக்கு உட்படத்திய பின் உங்களை ஒரு புகலிடக்கோரிக்கையாளராக வகைப் படுத்தப்படலாம். சட்ட உதவித்தகமை பெறுவதற்கு குறைந்த வருமானம் பெறும் ஒருவர் என்றும் உங்கள் கோரிக்கை வெற்றியடைவதற்கு யதார்த்தமான சாத்தியங்கள் உள்ளன என்றும் நிரூபிக்க வேண்டியிருக்கும்.

சட்ட உதவி இங்கிலாந்து மற்றும் வேல்ஸ்
சட்ட உதவி தொண்டு நிறுவனம்

சட்ட பிரதிநிதி ஒருவரை அமர்த்த

சட்டத்தரணிகள் சங்கம்
http://www.lawsociety.org.uk/find-a-solicitor

நேரடி அரசாங்கம்
http://www.gov.uk/find-a-legal-adviser

OISC-2ம் படி ∴ 3ம் படி ( நிபுணர்)
http://oisc.homeoffice.gov.uk/how to find a regulated immigration adviser

நீங்கள் இவர்களையும் தொடர்பு கொள்ளலாம்

Asylum Advice UK 0808 8000 642
www.asylumhelpuk.org

சட்ட உதவ ஸ்கொட்லாந்து
The Scottish Legal Aid Board சபை சட்ட உதவியை நிர்வாகிக்கறது.
சட்ட உதவி கொடர்பான மேலதிக தகவல்களைப் பெற: 0845 122 8686

சட்ட பிரதிநிதி ஒருவரை அமர்த்த

http://www.slab.org.uk/public/solicitor-finder/#register

http://oisc.homeoffice.gov.uk/how_to_find_a_regulated_immigration_adviser

The Law Society of Scotland: 0131 226 7411 / www.lawscot.org.uk

சட்ட உதவி வட ஐயர்லாந்து
The Northern Ireland Legal Services Commission வட ஐயர்லாந்தில் சட்ட உதவிகளை நிர்வாகிக்கின்றது.

சட்டப் பிரதிநிதி ஒருவரை அமர்த்த:

http://www.nilsc.org.uk/solicitors.asp?on=solicitors

http://www.lawsoc-ni.org/solicitors-directory/how-to-use-the-solicitors-directory

http://oisc.homeoffice.gov.uk/how_to_find_a_regulated_immigration_adviser

இவர்களையும் தொடர்ப கொள்ளலாம்

Asylum Advice UK: 0808 8000 642
www.asylumhelpuk.org

## 2.15 தவறான சட்ட ஆலோசனை பற்றி எவ்வாறு முறைப்பாடு செய்வது

உங்களுக்குதவறான சட்ட ஆலோசனை வழங்கபட்டது என நீங்கள் கருதினால் முறைப்பாடு ஒன்றை சமர்ப்பிப்தற்கு உங்களுக்கு உரிமை உள்ளது உங்கள் வழக்கை எடுத்திருக்கும் நிறுவனத்திடம் முதலில் எழுத்து மூல முறைப்பாட்டை சமர்ப்பிக்க வேண்டும். பின்வருபவற்றை இணைக்க வேண்டும்

- உங்கள் பெயர் மற்றும் முழு தொடர்பு விபரங்கள்
- முறைப்பாடு பற்றிய முழு விபரங்கள்( நேரம், திகதிகள் மற்றும் இடங்கள்)
- சாடசிகளின் விபரங்கள் (பொருத்தமாக இருந்தால்)
- பொருத்தமான கடிதங்கள் மற்றும் ஆவணங்களின் பிரதிகள்
- உங்கள் வழக்கு பதிவு இலக்கம்.

நீங்கள் முதல் தடைவ உங்கள் சட்ட ஆலோசகரை சந்தித்த போது கட்சிக்காரரின் நலன்கள் பற்றிய கடிதம் கொடுத்து இருப்பார்கள் இக்கடிதம் உங்களுக்கு வழங்கும் சேவை மற்றும் எவ்வாறு முறைப்பாடு செய்வது பற்றி உறுதி செய்து இருக்கும் உங்கள் முறைப்பாட்டை விசாரணை செய்ய எவ்வளவு காலம் எடுக்கும் என்பதும் தெரிவிக்கப் பட்டிருக்கும்

## 2.16 சூழ்நிலையில் மாற்றங்கள்

உங்களுக்கும் உங்களை சார்ந்தவர்களுக்கும் நிலைமையில் மாற்றங்கள் ஏதும் ஏற்பட்டால் உளவிவகாரப் Home Office க்கு அறியத் தர வேண்டும்.

இவை உள்ளடங்கலாக

- உங்கள் பெயரில் மாற்றம்
- ஏற்கனவே குறிப்பிடாத பண வரவு அல்லது பணம் பெறும் வாய்ப்பு
- ஏதாவது ஒன்றின் விற்பனை மூலம் பண வரவு அல்லது பணம் பெறும் வாய்ப்பு
- வேறு முகவரிக்கு மாறுதல்
- திருமணம் செய்தல், விவாகரத்து ஆதல், அல்லது உங்கள் துணையைப்பிரிந்து வாழ்தல்.
- உங்கள் துணையுடன் குடியியல் உறவை ஏற்படுத்துதல் அல்லது உங்கள் துணையுடன் ஒன்றாக வாழ்தல
- ˙.வைத்தியசாலையில் அனுமதிக்கப் படுதல்
- நீங்கள் ( அல்லது உங்கள் துணை ) கர்ப்பம் தரித்தல் அல்லது குழந்தை பெற்றல்.
- உங்கள் குழந்தைகளில் எவரேனும் பாடசாலையையோ அல்லது வீடடையோ விட்டு விலகுதல்.
- UK இல் குடும்ப அங்கத்தவர் எவரேனும் உங்களுடன் இணைதல் அல்லது பிரிந்து போதல்.
- வேறு எவரேனும் தங்குமிடத்தில் உங்களுடன் இணைதல் அல்லது விட்டு விலகுதல்.
- சிறை செல்லுதல்
- வேலை ஆரம்பித்தல் நின்றுவிட்டாலோ
- கர்ப்பமாக இருந்தால்.
- தங்கும் இடம் மற்றும் பண உதவி பெறுதல் இல் இருந்து பண உதவி இக்கு மாறுதல் அல்லது மாறாக

உங்கள் சூழ்நிலையில் ஏற்படும் மாற்றங்களை Home Officė க்கு தெரியப் படுத்துதல் முக்கியம் ஏனெனில் இது உங்கள் கொடுப்பனவுகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும்.

Home Office ஆதரவு கட்டம் க்கு உங்கள் சூழ்நிலை மாறின பிறகு மாற்றங்கள் பற்றி தெரிவிப்பதற்கு உதவி தேவைப்படின் புகலிடம் உதவி மையம் உங்களுக்கு உதவி செய்யும் தொடர்பு கொள்க

Asylum Support Application UK: 0808 8000 643
www.asylumhelpuk.org

உங்கள் சூழ்நிலை மாற்றத்தை உடனே உங்கள் சட்ட வல்லுனருக்கோ ∴ மற்றும் இடம் மாற்றம் குறித்த ஹோம் ஆபீஸ் கோ தெரிய படுத்த வேண்டும்

## 2.17 சுகாதாரப் பராமரிப்பு

உங்கள் கோரிக்கை அல்லது மேன்முறையீடு பரிசீலனையில் இருக்கும் வரையில் தேசிய சுகாதார சேவையின் (NHS) பாராமரிப்பைப் பெற்றுக் கொள்ள உங்களுக்கு உரிமை உண்டு. நீங்கள் ஆரம்ப தங்குமிடத்தில் இருப்பவர் என்றால் அங்கு அனுமதிக்கப் படும் போது சுகாதாரப் பரிசோதனைக்கு உள்ளாவீர்கள்.

நிங்கள் ஆரம்ப தங்குமிடத்தில் இல்லை என்றால் அல்லது பரவலாக்கப் பட்வர்களில் ஒருவர் என்றால் உங்களுக்கு தேவையான வைத்திய பராமரிப்பை பெற வேண்டும் என்றால் பொது வைத்தியர் (GP) என அழைக்கப் படும் மருத்துவர் ஒருவரிடம் பதிவு செய்ய வேண்டும்˙. பதிவ செய்வதற்கு உங்கள் பெயர் ,பிறந்த திகதி, விலாசம் இருந்தல் தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை கொடுக்க வேண்டும். புதிய நோயாளிக்கான  பதிவேடு ஒன்றினையும் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கும். நீங்கள் ஒரு புகலிடம் கோருபவர் என்றும் , இலவச மருத்துவ உடல் உதவி பெறுபவர் என்றும் நிரூபிக்க உங்கள்  ARC அட்டையை காண்பிக்க வேண்டும்

ஆதரவில் இருப்பவர் குடியேற்றம் மற்றும் புகலிடம் சட்ட பிரிவு 95 இன் கீழ் என்றால் HC2 சான்றிதல் எனற படிவம் உங்களுக்கு தரப்படும். இது உங்களுக்கு ஆரம்ப தங்குமிடத்தில் அல்லது நீண்டகால தங்குமிடத்தில் சேர்ந்து 18 நாட்களின் பின்னர் தரப்படும். உள்விவகாரப் பணியகத்தின் உதவி பெறுபவர் இல்லை என்றால் HC1 என்ற படிவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். வேலை மற்றும் ஓய்வூதியத் திணைக்களத்தில் இருந்து அல்லது உங்கள GP யிடம் இருந்து விபரங்கள் பெறலாம். இந்த HC2 சான்றிதல் பொதுவாக ஆறு  மாதத்திற்கு செல்லுபடி ஆகும் . அதனை புதுபிக்க நீங்கள் புதிதாக ஒரு HC1 பாரத்தை பூர்த்தி செய்ய வேண்டும் .  இதனை நீங்கள் கீழ்வரும் கணினி தொடர் மூலம் கோரலாம்
http://www.nhsbsa.nhs.uk/HealthCosts/1128.aspx.

நீங்கள் இதனை வேலை தேடும் மையம், பல் மருத்துவம் , கண் மருத்துவம் மற்றும் மருந்தகங்களில் பெற்று கொள்ளலாம்

ஒரு HC2 படிவம் வழங்கும் சேவைகள்.

- NHS மருந்துச் சீட்டுகள் (ஸ்கொட்லாநிலும் வேல்ஸில் வசிப்பவர்களுக்கு இலவசம்)
- NHS பல் சிகிச்சை (அழகு படுத்துதல் அல்லாத)
- பார்வைப் பரிசோதனைகள்
- கண்ணாடிகளும் விழி வில்லைகளும˙(எவ்வளவு விலை வரை விண்ணப்பிகலாம் என்பதை கண்ணாடி விற்பனர் உறுதி செய்வார்.)
- ஒரு நிபுணரின் NHS சிகிச்சையைப் பெறுவதற்கு ஏற்படும் பயணச் செலவுகள்
- NHS இன் துணிகளிலான தாங்கிகள்- உதாரணமாக முள்ளந்தண்டு மற்றும்

அடிவயிற்றுக்கான தாங்கிகள் அல்லது வைத்திய சாலைகளின் ஊடாக கொடுக்கப் படும் மார்புக் கச்சைகள் (ஸ்கொட்லாந்திலும் வேல்ஸில் வசிப்பவர்களுக்கு இலவசம்)

உங்களுக்க காச நோய் (TB) அல்லது ஏதாவது தொற்று நோய் உள்ளது என்று கருதினால் உடனடியாக வைத்திய உதவியை நாட வேண்டும்.

நீங்கள் ஸ்காட்லாந்தில் ஆரம்ப தங்குமிடத்தில் தங்கி இருந்தால் , உங்களது மருத்துவரின் குறிப்புகளை நீங்கள் ஆரம்ப தங்குமிடத்தில் இருந்து போவதற்கு முன் கொடுக்க படும் . புகலிடம் கோரும் விண்ணப்பம் இருக்கிறதோ இல்லையோ UK இல் உள்ள வரை புகலிடம் கோருபவர்கள் ஸ்காட்லாந்தில் NHS சேவையை பெற்றுகொள்ளலாம்

## 2.18 : கற்பகால பணஉதவி .

குழந்தை பெற்று வளர்க்க தேவையான ஒரே முறை பண உதவியாக £ 300 புகலிட உதவியாக வழங்கப்படும் . இதற்க்கான கோரிக்கையை எழுத்து மூலம் குழந்தை பிறப்பதற்கு 8 வாரத்திற்கு முன்பில் இருந்து பிறந்த 6 வாரத்திற்கு உள்ளாக கோரவேண்டும் . குழந்தை பிறக்கும் எதிர்பார்க்கும் நாளை (MATB1 பாரம் ) அல்லது பிறந்த குழந்தையின் சான்றிதழை சாட்சியாக கொடுக்கவேண்டும் . ஒரு குழந்தைக்கு £300 வீதம் வழங்கப்படும் . இரண்டு குழந்தை பிறந்தால் £600 வழங்கப்படும் . நீங்கள் பிரிவு 4 இன் படி உதவி கோருபவரானால் £250 , குழந்தை பிறக்கும் 8 வாரத்திற்கு முன்பில் இருந்து பிறந்த 6 வாரத்திற்குள் கோரவேண்டும். ...கற்பமாக உள்ள அல்லது மூன்று வயதிற்குள் குழந்தை வைத்திருக்கும் புகலிடம் கோரும் அணைத்து பெண்களுக்கும் கூடுதல் பண உதவி பெற தகுதி உள்ளவர்கள். ஒரு வயதிற்குள இருக்கும் குழந்தைக்கு கூடுதலாக £5 ஒரு வாரத்திற்கு கொடுக்கப்படும் . கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகள் வயது 1-3 £3 வாராந்திர அடிப்படையில் வழங்கப்பட்டது.

## 2.19 அதிகார துஷ்ப்ரயோகம்

மற்றவர்களை பயப்படுத்தும் எந்த ஒரு அதிகாரத்தை தவறாக பயன் படுத்துவதும் அதிகார துஷ்ப்ரயோகம் ஆகும் . உறவில் இருக்கும் இரண்டு முதிர்ச்சி பெற்றோர் அல்லது குடும்ப அங்கத்தினரோ , உங்களுடன் வாழ்பவரோ அல்லது வாழ்ந்தவரோ மற்றும் எந்த பாலராக இருப்பினும் வன்முறையில் ஈடுபடுவது அதிகார துஷ்ப்ரயோகம் ஆகும் -- அதிகார துஷ்ப்ரயோகம் யாரையும் எந்த நேரத்திலும் பாதிக்கும் . யாருடன் வாழ்தாலும் அல்லது அவர்கள் உறவு எப்படி இருந்தாலும் இரு பாலரும் இதனால் பாதிக்க படுவார்கள் . பாதிக்கப்பட்ட மனிதராகவோ , சாட்சியாலராகவோ இப்படி பட்ட நபருடன் நீங்கள் வாழ்பவராக இருந்தால் நீங்கள் உதவி கோரலாம் என்பதை முக்கியமாக அறிந்து கொள்ளுங்கள் . குடியுரிமை எப்படி இருந்தாலும் அதிகார துஷ்ப்ரயொகதிலிருந்து எல்லோருக்கும் பாதுகாப்பு தேவை ஆகையால் எல்லோரும் தகுதி உடையவர்கள் -- இவ்வாறு அத்து மீறுபவர்களை தேசிய அதிகார துஷ்ப்ரயோகம் மையத்திற்கு 24 மணிநேர உதவிமையதுடன் தொடர்பு கொண்டு புகார் செய்யலாம் (0808 2000 247 இலவச தொலை பேசி எண்) காவல் துறை ,

உங்கள் மருத்துவர் , சுகநல விருந்தினர் , அகதிகள் முகாம் , அருகில் உள்ள உதவி மையம் . -- நீங்கள் விரும்பினால் பெண் ஊழியரிடமோ அல்லது ஒரு பெண் மொழிபெயர்பாலரிடமோ கதைக்கலாம் . நீங்கள் பரிமாறும் தகவல்கள் ரகசியமாக வைக்கப்படும்

## 2.20 விருப்பத்தின் பெயரில் நாடு திரும்புதல்

உங்கள் பரிசோதனைனு பின்னர் உங்கள் சூழ்நிலைகளில் மாற்றம் எற்பட்டு நீங்கள் வீடு திரும்பத் தீர்மானித்தால் அத்துடன் உங்கள் புகலிடக் கோரிக்கையை தொடர விருப்பம் இல்லை என்றால் தொடர்பு கொள்ள தானாக திரும்பும் உதவி வழங்கும் மையம் ஹோம் ஆபீஸ் நடத்தி வருகிறது . மேலும் விபரங்களுக்கு இணையதளத்தை அணுகவும் . தானாக திரும்பும் குழு :

0300 004 0202.
www.gov.uk/return-home-voluntarily

புகலிடம் கோரவில்லை என்று முடிவு செய்து அத்துடன் நீங்கள் ஒரு கிரமமற்ற குடிவரவாளர் என்றால் ( UK இல் இருப்பதற்கு உரிமை அற்றவர்) அத்துடன் நாடு திரும்ப விரும்பினால் உதவியும் ஆதரவையும் இவர்களிடம் பெற முடியும் தானாக திரும்பும் உதவி வழங்கும் மையம் ஹோம் ஆபீஸ் நடத்தி வருகிறது . மேலும் விபரங்களுக்கு இணையதளத்தை அணுகவும்

www.gov.uk/return-home-voluntarily

## 2.21 : அடுத்து என்ன நடக்கும் ?

முதல் பரிசோதனையின் பின்னர் முழு புகலிடத்திற்கான நேர்காணல் ஒழுங்கு செய்யப்படும். அதற்கு முன்னர் ஒரு வழக்கரைஞரைப் பார்ப்பது மிகவம் முக்கியம். அவர் உங்கள் ஆதாரங்களை மொழிபெயர்த்து உங்கள் நேர்காணலுக்கு முன்னராகவே சமர்ப்பிப்பதற்கு ஏதுவாக இருக்கும். விரிவான நேர்காணலுக்கு முன் பற்றிய பகுதியைப் பார்க்கவும்

Asylum Help பற்றி முறைப்பாடு செய்வது Migrant Help இன் சேவைகளை நாடும் எவரேனும் முறைப்பாடு செய்யலாம்.

எங்கள் சேவைகள் தொடர்பாக ஏதாவது பிரச்சினை உள்ளதென்றால் நீங்கள் செய்ய வேண்டியது

அலுவலர் அல்லது தொண்டர் ஒருவரிடம் வி'யத்தைக் கூறுங்கள் முறைப்பாடு திருப்திகரமாகத் தீர்க்கப்படவில்லை என்றால் முறைப்படு படிவத்தை பாவித்து எழுத்து மூலம் முறைப்பாடு செய்யலாம். இதனை நீங்கள் Asylum Advice UK ஐ 0808 8000 642 இல் அழைப்பதன் மூலம் அல்லது படிவத்தை இணையதளத்திலிருந்து தரைவிறக்கம் செய்து கொள்ளலாம் www.asylumhelpuk.org

நீங்கள் முறைப்பாடு செய்யவிருக்கும் சேவையின் முகாமையாளருக்கு விலாசமிட்டு முறைப்பாட்டினை அனுப்ப வேண்டும். முறைப்பாடுகள் ஆங்கிலத்தில் தான் எழுதியிருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை அது உங்கள் மொழியில் எழுதப்படலாம் Asylum Help இதனை மொழி பெயர்க்கும் முகாமையாளர் முறைப்பாட்டை விசாரணை செய்து நடவடிக்கை எடுப்பார் உடனடியாக ஒரு திருப்திகரமான பதில் நாங்கள் தரமுடியாவிட்டால் 10 நாட்களுக்குள் என்ன நடவடிக்கை மேற்கொண்டோம் என்பதின் விபரங்களுடன் எழுத்து மூல முழுப் பதில் தருவோம்.

உங்கள் முறைப்பாட்ன் பெறு பேறு பற்றி திருப்தி இல்லாவிட்டால் Complaints Officer க்கு எடுத்துச் செல்லலாம் Migrant Help, Charlton House, Dover, CT16 1AT. இன்னமும் உங்களுக்கு திருப்தி இல்லை என்றால் உங்கள் முறைப்பாட்டை தீர்க்க முடியவில்லை என்பது பதியப் பட்டு வேறு எந்த அமைப்புகளிடம் இதனை நீங்கள் மேலும் முறைப்பாடு செய்யலாம்˙ என்பது பற்றி ஆலோசனை வழங்குவோம்.

இப்பகுதி பற்றி மேலதிக தகவல்களுக்கு தயவு செய்து Asylum Help. உடன் தொடர்பு கொள்ளவும்

www.asylumhelpuk.org

Asylum Advice UK 0808 8000 642
Asylum Support Applications UK 0808 8000 643